தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 132/பேரூ/2021

நாள் 10.01.2022

திரு. S.S. அப்பு,
நாரவாரிகுப்பம்,
திருவள்ளூர் மாவட்டம், சென்னை–52 ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
நாரவாரிகுப்பம் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்குட்பட்ட செங்குன்றம், எண்.27 வேணுகோபால்சாமி கோயில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.S. அப்பு என்பவரின் 10.12.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.12.2021ல் பெறப்பட்டு, 132/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருவள்ளூர் மாவட்டம், நாசரேத் பேரூராட்சி, நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்குட்பட்ட செங்குன்றம், எண்.27, வேணுகோபால்சாமி கோயில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. S.S. அப்பு என்பவர் தமது 10.12.2021 நாளிட்ட புகார் மனுவில் நாரவாரிகுப்பத்தில் உள்ள சுடுகாட்டில் குப்பைகள் பெருமளவில் அகற்றப்படாமல் உள்ளதென்றும், குப்பைகளை அகற்றக்கோரி 11.2.2020ல் தான் நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் புகார் மனு அளித்ததாகவும், அதற்கு பேரூராட்சியால் வழங்கப்பட்ட பதில் கடித எண்.47/2020 நாள் 20.02.2020ல் நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்குட்பட்ட சுடுகாட்டில் ஒரு பகுதியில் பேரூராட்சியின் மூலம் கொட்டி வைக்கப்பட்டுள்ள குப்பைகளை, 2018–2019ஆம் ஆண்டு

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், ரூ.33.30 இலட்சம் செலவீட்டில் உயிரி அகழ்வு (Bio-Mining) முறையில் தீர்வுசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், குப்பைகள் அகற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இதுவரை குப்பைகள் அகற்றப்படவில்லை. மேலும், கடந்த 4.9.2021 முதல் நாரவாரிகுப்பம் பேரூராட்சி எரிமேடையும் பழுதடைந்ததால், அதனை சரிசெய்யுமாறும் புகார் மனு கொடுக்கப்பட்டதாகவும், ஆனால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் பேரூராட்சியால் எடுக்கப்படவில்லை. இது தொடர்பாக பேரூராட்சி செயலாளர் மற்றும் அலுவலரை தொடர்புகொண்டு கேட்டபோது விரைவில் சரிசெய்யப்படும் என்று அவ்வப்போது தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் சுமார் ஆறு மாத காலமாக இதனை சரிசெய்யாததால், சுடுகாட்டிலுள்ள குப்பைகளை அகற்றிடவும், பழுதடைந்துள்ள எரிமேடையை சரிசெய்யவும், உரிய விசாரணை மேற்கொண்டு மிகவும் அலட்சிய போக்கில் உள்ள அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க ஆணைகளைப் பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

2. நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 04.01.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 22.12.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் 4.1.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

மனுதாரர் திரு. S.S. அப்பு அளித்துள்ள வாக்குமூலத்தில் "நாரவாரிகுப்பம் பேரூராட்சி சோத்துப்பாக்கம் சாலையில் உள்ள சுடுகாட்டில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை அகற்றாமல், அங்கு குப்பைகள் பெருமளவில் தேங்கியுள்ளன. மேற்கண்ட சுடுகாட்டில் தேங்கியுள்ள குப்பைகளை காரணம்காட்டி, இறந்தவர்களின் உடலை அவரவர் மத சம்பிரதாயப்படி புதைக்காமல், கட்டாயமாக எரிக்குமாறு கூறுகின்றனர். சுடுகாட்டில் தேங்கியுள்ள குப்பைகளை அகற்றுமாறு மாவட்ட நிர்வாகத்திற்கும், பேரூராட்சிகளின் ஆணையாளருக்கும் மனுக்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட இடத்தில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை பேரூராட்சியின் மூலம் அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான புகைப்படத்தையும் இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும் எனது 4.9.2021 நாளிட்ட மனுவினையே எனது கூடுதல் வாக்குமூலமாக இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்திட வேண்டிக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள 4.9.2021 நாளிட்ட புகார் மனுவில் நாரவாரிகுப்பம் பேரூராட்சி பகுதியில் சுமார் 25,000க்கு மேல் மக்கள் வசித்து வருகின்றனர். இங்குள்ள சுடுகாடு நல்ல பயன்பாட்டில் இருந்து, மரணமடைந்தோர்கள் நல்லடக்கம் செய்யப்பட்டு வந்த நிலையில், சுடுகாடு பகுதி தற்போது பேரூராட்சியின் அலட்சியப் போக்கால் குப்பைகளைக் கொட்டி, குப்பைக் காடாக மாற்றிவிட்டனர். தாங்கள் பல வருடங்களாக பயன்படுத்திவந்த சுடுகாடு தற்போது

பயன்படுத்த முடியாமல் உள்ளது. இது தொடர்பாக ஏற்கனவே புகார் தெரிவித்தபோது, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ரூ.33.30 லட்சம் செலவில் Bio Mining மூலம் சீர்செய்யும் பணிகள் நடைபெறுவதாக தெரிவித்தார்கள். தற்போதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. அப்போது எரிமேடை மட்டுமே பயன்பாட்டில் இருந்தது. தற்போது அதுவும் பழுதாகி பல மாதங்களாகிறது. தற்போது பொது மக்கள் இறுதிச் சடங்கு செய்ய அங்குமிங்கும் அலைக்கழிக்கப்படுகின்றனர். எனவே, நாரவாரிகுப்பம் பொது மக்கள் பயன்படுத்திட ஏதுவாக சுடுகாட்டில் கொட்டப்பட்டுள்ள குப்பைகள அகற்றி, எரிமேடையை சீர்செய்து மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்கு கொணர நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

4. நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் 4.1.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "நாரவாரிகுப்பம் பேரூராட்சி சோத்துப்பாக்கம் சாலையில் உள்ள சுடுகாட்டில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், உயிரி அகழ்வு (Bio Mining) முறையில், அப்புறப்படுத்த பேரூராட்சியால் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட இடத்தில் 4130 கியூபிக் மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டுவிட்டன. மேலும், சுமார் 1078 கியூபிக் மெட்ரிக் டன் குப்பைகளை அகற்றும் பணி தற்போது பெய்த மழையினால் அவை நனைந்து ஈரமாக உள்ளதால், அவற்றை அகற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதையும், மேற்கண்ட இடத்திலுள்ள அனைத்து குப்பைகளும் இன்னும் 30-40 நாட்களில் அகற்றப்பட்டு, அந்த இடம் சீரமைக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேற்கண்ட இடத்தில் மேலும் குப்பைகளைக் கொட்டாமல் இருக்க பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்நேர்வு தொடர்பான எனது 3.1.2022 நாளிட்ட கடிதத்தினையே எனது மேல் விளக்கமாக இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. மேலும், நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 3.1.2022 நாளிட்ட அறிக்கையில் திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிகுப்பம் தேர்வுநிலை பேரூராட்சி சென்னையை ஒட்டியுள்ள பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் 2011ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 20,946 மக்கள் தொகை கொண்ட 18 வார்டுகளும், 205 தெருக்களையும் கொண்ட பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியினைச் சுற்றியுள்ள 35 கிராமங்களிலிருந்து தினசரி சுமார் 40,000க்கும் மேற்பட்டோர் வந்து செல்கின்றனர். இப்பேரூராட்சிக்குட்பட்ட சோத்துக்பாக்கம் சாலை சர்வே எண்.90/1ல் அமைந்துள்ள சுடுகாட்டின் ஒரு பகுதியிலிருந்த 5208 கியூபிக் மெட்ரிக் டன் குப்பைகளை உயிரி அகழ்வு (Bio Mining) முறையில் அப்புறப்படுத்த 2018-2019ஆம் ஆண்டிற்கான திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ.33.30 இலட்சம் பேரூராட்சிகளின் இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பேரூராட்சி செயல் அலுவலரால் பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 5208 கியூபிக் மெட்ரிக் டன் அளவுள்ள குப்பைகளில் 4130 கியூபிக் மெட்ரிக் டன் குப்பைகள் உயிரி அகழ்வு (Bio Mining)

முறையில் அப்புறப்படுத்தப்படாமல் உள்ளன. மழைக்காலம் முடிந்தவுடன் மீதமுள்ள 1078 கியூபிக் மெட்ரிக் டன் குப்பைகள் அப்புறப்படுத்தப்படும்.

6. பேரூராட்சிக்குட்பட்ட சோத்துப்பாக்கம் சாலையில் சர்வே எண்.90/1ல் சுடுகாடு அமைந்துள்ளது. சுடுகாட்டின் ஒரு பகுதியில் 2005–2006ஆம் ஆண்டிற்கு சேமிப்பு மற்றும் ஊக்க நிதியில் சுமார் 30.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மரக்கட்டையிலான நவீன தகன எரிமேடை அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்துவந்த நிலையில், 2021ஆம் ஆண்டு மரக்கட்டையிலான தகன எரிமேடை பழுதடைந்ததைத் தொடர்ந்து, மேற்படி எரிமேடையினை புதுப்பிக்க பேரூராட்சிகளின் ஆணையரால் 2020–2021ஆம் ஆண்டிற்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதியில் பழுதடைந்துள்ள மரக்கட்டையிலான தகன எரிமேடையினை அப்புறப்படுத்திவிட்டு, புதிதாக LPG எரிவாயு மூலம் மற்றும் மரக்கட்டையிலான தகன எரிமேடை அமைத்திட ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டதில் திருவாளர் M.H.T.M Engineering, ஈக்காட்டுதாங்கல், சென்னை–32 என்ற நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கப்பட்டு, LPG எரிவாயு மூலம் சடலத்தினை தகனம் செய்யும் இயந்திரம் பொருத்தும் பணி முடிவுற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. LPG எரிவாயு தகனமேடை கட்டிடத்தின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் ஒருசில பராமரிப்புப் பணிகள் செய்யவேண்டியுள்ளதால், இப்பணிகளை பேரூராட்சியின் பொது நிதியில் செய்திட ஏதுவாக நிர்வாக அனுமதிவேண்டி திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு கருத்துரு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி கிடைக்கப் பெற்றவுடன் பராமரிப்புப் பணிகள் செய்து முடிக்கப்படும். தற்போது சுடுகாட்டிலுள்ள குப்பைகளில் 4130 கியூபிக் மெட்ரிக் டன் குப்பைகள் அகற்றப்பட்டுவிட்டது. LPG எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு, சுமார் 6 எண்ணிக்கை சடலங்கள் எரிக்கப்பட்டுள்ளது என்றும் நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இதற்கு ஆதாரமாக பேரூராட்சியின் மூலம் வழங்கப்பட்ட தகன எரிமேடைக் கட்டண ரசீதுகளின் துறைப் பிரதிகளையும், சுடுகாட்டில் கொட்டப்பட்டுள்ள குப்பைகளை பயோ மைனிங் முறையில் சுத்தம் செய்வதற்கு திருவாளர். ஆல்வின் டம்ப் யார்டு செக்ரிகேஷன், எம்.ஜி.ஆர் நகர், சென்னை–78க்கு வழங்கப்பட்ட பணி ஆணையின் நகல், நவீன எரிவாயு தகன மேடையை ரூ.50 லட்சம் (ரூபாய் ஐம்பது லட்சம்) மதிப்பீட்டில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநரால் 03.06.2021ல் வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி ஆணை நகல், நாரவாரிகுப்பம் செயல் அலுவலரால் திருவாளர்கள் M.H.T.M Engineering, ஈக்காட்டுத்தாங்கல் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 25.6.2021 நாளிட்ட பணி ஆணையின் நகல் மற்றும் எல்.பி.ஜி கேஸ் மற்றும் பயோ கேஸ் எரிமேடையின் புகைப்படங்கள், பயோமைனிங் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகியவற்றையும் நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 4.9.2021 நாளிட்ட மனுவின் நகல், பேரூராட்சி நிர்வாகத்தால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட கடித நகல்கள் மற்றும் நாரவாரிகுப்பம் சுடுகாட்டில் குப்பைகள் கொட்டப்பட்டு குவிக்கப்பட்டுள்ள புகைப்பட

நகல்கள், நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அளித்துள்ள 3.1.2022 நாளிட்ட விளக்க அறிக்கை, ஆவணங்களின் நகல், LPG எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்ட பின்னர் சடலங்கள் எரிக்கப்பட்டதற்கான ரசீது நகல்கள் மற்றும் நாரவாரிகுப்பம் பேரூராட்சி சோத்துப்பாக்கம் சாலையில் எல்.பி.ஜி கேஸ் மற்றும் பயோ கேஸ் எரிமேடை அமைக்கப்பட்டதற்கான புகைப்படங்கள், பயோமைனிங் வேலைகள் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில், கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

❖ மனுதாரர் நாரவாரிகுப்பம் சுடுகாட்டில் பேரூராட்சியால் குப்பைகள் கொட்டிவைக்கப்பட்டு அகற்றப்படாமல் உள்ளதென்றும், எரிமேடையும் பழுதடைந்த நிலையில் அதனை சரிசெய்யவேண்டியும் 11.2.2020–ல் பேரூராட்சியில் மனு அளித்துள்ளார். அவரவர் மத சம்பிரதாயப்படி இறுதிச் சடங்கு செய்யமுடியாமல் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், புகார் மனுவின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்குமாறு, திருவள்ளூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் 17.2.2020 நாளிட்ட கடிதம் மூலம், நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளதும் ஊர்ஜிதமாகிறது.

❖ இதனைத் தொடர்ந்து, நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரருக்கு 20.02.2020 நாளிட்ட பதிலறிக்கையில் நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்குட்பட்ட சுடுகாட்டின் ஒரு பகுதியில் பேரூராட்சி மூலம் கொட்டிவைக்கப்பட்டுள்ள குப்பைகளை 2018–2019ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.33.30 இலட்சம் செலவில் உயிரி அகழ்வு முறையில் குப்பைகளை தீர்வு செய்யும் பணிகள் நடைபெற்றுவருவதாகவும், குப்பைகள் அகற்றப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ குப்பைகள் அகற்றப்படாத நிலையிலும், எரிமேடை பழுதடைந்ததன் காரணமாகவும் பொது மக்கள் இறுதிச் சடங்கு செய்ய அங்குமிங்கும் அலைகழிக்கப்படுகிறார்கள் என்பதால், குப்பைகளை அகற்றி எரிமேடையை மக்கள் பயன்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீண்டும் 04.09.2021ல் மனுதாரரால் பேரூராட்சிக்கு புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

❖ திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2018–2019ன் கீழ் 244 பேரூராட்சிகளில் பலதரப்பட்ட 680 பணிகளுக்கு மொத்தம் ரூ.9234.66 இலட்சத்திற்கு, தனித்தனியே நிர்வாக அனுமதி பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8866/2018/உ4 நாள் 16.10.2018ல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளில், நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் உயிரி அகழ்வு முறையில் (Bio Mining) குப்பைகளை தீர்வு செய்திட/அகற்றிட ரூ.33.30 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

- ❖ மேற்கண்ட நிர்வாக அனுமதியின் அடிப்படையில், நாரவாரிகுப்பம் தேர்வுநிலை பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், திருவாளர் ஆல்வின் டம்ப் யார்டு செக்ரிகேஷன் என்ற நிறுவனத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.199/2018/அ1 நாள் 28.3.2019ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. பணி ஆணையில் ஒப்பந்த தொகை, பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்படவேண்டிய கால நிர்ணயம் ஏதும் குறிப்பிடாமல் "வேலைகளை குறித்த கால நேரத்திற்குள் செய்து முடிக்கப்படவேண்டும்" என்று மட்டும் குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளதும் ஆவணங்களின்படி ஊர்ஜிதமாகிறது.

- ❖ அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் நவீன எரிவாயு தகனமேடை புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ரூ.50.00 இலட்சம் (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் 2021–22ஆம் ஆண்டு இயக்கம் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ள, பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல் முறைகள் ந.க.எண்.5575/2021/உ5 நாள் 03.6.2021ல் நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இதன்படி தற்போது பழுதடைந்த நிலையில் உள்ள எரிவாயு தகன மேடை அலகை முழுமையாக மாற்றிடவும் மற்றும் கூடுதலாக எல்.பி.ஜி வாயு மூலம் தகனம் செய்யும் இயந்திரம் பொருத்தி இரண்டையும் தேவைக்கேற்ப மாற்றி பயன்படுத்திக்கொள்ளும் வகையில் புதுப்பித்திட நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

- ❖ இதன் அடிப்படையில் நாரவாரிகுப்பம் பேரூராட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்து, M.H.T.M Engineering, Ekkattuthangal, Chennai-32 என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் இறுதிசெய்யப்பட்டு, செயல் அலுவலரது ஆணை Roc.183/2020/A1 நாள் 25.6.2021ல் பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்த ஆணை வழங்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்கள் (04) ஒப்பந்த கால அளவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

- ❖ அதன்படி பணிகள் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிறைவுபெற்று, LPG எரிவாயு தகனமேடை பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக செயல் அலுவலரால் உறுதிசெய்யப்பட்டுள்ளதோடு, சுமார் 6 எண்ணிக்கையிலான சடலங்கள் எரியூட்டப்பட்டுள்ளன என்பதும் ஊர்ஜிதபடுத்தப்பட்டுள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், திருவள்ளூர் மாவட்டம், நாரவாரிகுப்பம் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட சோத்துப்பாக்கம் சாலை, சர்வே எண்.90/1ல் அமைந்துள்ள சுடுகாட்டில் பேரூராட்சியால் கொட்டிவைக்கப்பட்டுள்ள குப்பைகள் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் பயோ மைனிங் முறையில் சுத்தம் செய்து, தீர்வு செய்து அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு, குப்பைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 1078 கியூபிக் மெட்ரிக் டன் குப்பைகள் மழையின் காரணமாக அப்புறப்படுத்தப்படாமல் உள்ள நிலையில், அனைத்து குப்பைகளும் இன்னும்

30–40 நாட்களில் அப்புறப்படுத்தப்பட்டு அந்த இடம் சீராக்கப்படும் என்று நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், நாரவாரிகுப்பம் பேரூராட்சியில் LPG தகன மேடை (Supply and fixing of Gasifier and LPG dual Crematorium without Chimney in the existing Gasifier Crematorium) அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாகவும் செயல் அலுவலரால் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், LPG தகன மேடை பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொணரப்பட்டுள்ள காரணத்தினால், பொதுமக்களின் சுகாதார நிலையை உறுதிசெய்திட வேண்டியது பேரூராட்சியின் கட்டாய கடமையென்பதாலும், மிக அருகாமையிலேயே பொதுமக்கள் பயன்பாட்டிலுள்ள கட்டிடங்கள் அமையப்பெற்றுள்ளதால், சுகாதார சீர்கேடு ஏதும் நிகழாமல் எஞ்சிய குப்பைகளை நாரவாரிகுப்பம் பேரூராட்சி உறுதியளித்துள்ளவாறு 30–40 நாட்களுக்குள் முற்றிலுமாகஅகற்றி, மீண்டும் அவ்விடத்தில் புதிய குப்பைகளை கொட்டாவண்ணம் அவ்விடத்தினை சீரமைத்திடுமாறு நாரவாரிகுப்பம் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார். பொது மக்கள் தங்கள் மதச்சம்பிரதாயப்படி மேற்கொள்ளக்கூடிய பொது இடங்களில் குப்பைகளைக் கொட்டி சுகாதார சீர்கேடு ஏதும் ஏற்படாமலும், பொது மக்களின் மத ரீதியிலான பயன்பாட்டிலுள்ள இவ்வாறான இடங்களில் இனிவரும் காலங்களில் பேரூராட்சியின் மூலம் குப்பைகளை கொட்டுவதை முற்றிலும் தவிர்த்திடுமாறும் செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/- x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. S.S. அப்பு, எண்.27 வேணுகோபால்சாமி கோயில் தெரு,
நாரவாரிகுப்பம், செங்குன்றம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை–600 052.
செயல் அலுவலர்,
நாரவாரிகுப்பம் தேர்வுநிலை பேரூராட்சி, நாரவாரிகுப்பம், திருவள்ளூர் மாவட்டம்–600 052

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032

11/01/22

செயலாளர்

11.1.22